**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**C.C.No.13/2014**
**Prosecution Witness P.W. 5**

.....

Name : திரு. நாடாங்கண்ணு Calling :

Father's name : Religion :

Village : Age :

Taluk :

நாள் **- 17.07.2025**

**(எதிரி ஆஜரில்லை, எதிரி தரப்பு வழக்கறிஞரால் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் தமிழ்நாடு காவல்துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து 2005-ம் ஆண்டு ஓய்வு பெற்றேன். கடந்த 2001 ம் ஆண்டு அவனியாபுரம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பொறுப்பில் இருந்த போது நிலைய அலுவல்பொறுப்பில் இருந்த சார்பு ஆய்வாளர் திரு.பீர்முகம்மது என்பவர் பணியில் இருந்தார். அவர் தற்சமயம் காலமாகிவிட்டார். அவர் 18.05.2001 ம் தேதி காலை 9.00 மணிக்கு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது திரு. இராமமூர்த்தி என்பவர் கொடுத்த புகாரை பெற்று,அவனியாபுரம் காவல்நிலைய குற்ற எண்.302/2001 பிரிவுகள் 39 (1), 44(1) சி, இந்திய மின்சார சட்டத்தின் கீழ் ஒரு வழக்கு பதிவு செய்திருந்தார். அவர் பதிவு செய்த அச்சுப்படிவ முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.7** ஆகும். மேற்படி வழக்கை ஆய்வாளர் என்ற முறையில் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று, மாதிரி வரைபடம் தயார் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் மாதிரி வரைபடம் நான் தயார் செய்தது ஆகும், அது **அ.சா.ஆ.8** ஆகும். அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு சாட்சிகள் அழகேசன், கார்த்திகைசெல்வம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒரு பார்வைமகஜர் தயார் செய்தேன் மேற்படி பார்வைமகஜர் அ.சா.ஆ.4 ஆக ஏற்கனவே குறியீடுசெய்யப்பட்டுள்ளது. பின்பு அதே நாள் காலை 11.00 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் ஒரு அத்தாட்சி

தயார் செய்தேன், SC 427 என்ற மீட்டரை கைப்பற்றினேன். அந்த மீட்டர் பெட்டி **சா.பொ.1** ஆகும். அந்த அத்தாட்சி ஏற்கனவே அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சொத்துக்களை படிவம் 95 மூலமாக நீதித்துறை நடுவர் எண்.7, மதுரை அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் படிவம் 95 **அ.சா.ஆ.9** ஆகும். அதே நாள் சாட்சிகள் இராமமூர்த்தி, காளிதாஸ், மீனாட்சிசுந்தரம், கணேசன், கார்த்திகைசெல்வன், அழகேசன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு நான் பணிமாறுதல் செய்யப்பட்டதால் எனக்கு பின்பு வந்த காவல்ஆய்வாளர் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டார். சா.பொ.1 ஆன மீட்டரை சீல்களுடன் கைப்பற்றிறேன். அந்த சீல் ஒன்று **சா.பொ.2** ஆகும்.

**குறுக்குவிசாரணை**

நான் தயாரித்ததாக சொல்லப்படும ஆவணங்கள் அனைத்தும் 21.05.2001 ம் தேதி நீதித்துறை நடுவரால் பெறப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். சார்பு ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டதாக சொல்லப்படும முதல்தகவல்அறிக்கையும் அன்றையதேதி நீதித்துறை நடுவரால் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சம்பவ இடம் சென்ற போது வெங்கடேஸ்வரா மாவுமில்லில் உரிமையாளரோ அல்லது அங்கு பணியாட்களோ யாரும் இல்லை என்றால் சரிதான். பார்வைமகஜர் சாட்சிகளாக கையொப்பம் போட்டுள்ள இரண்டு நபர்களும் மின்வாரியத்துறையை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வெங்கடேஸ்வரா மாவுமில்லுக்கு அருகில் கடைகள், வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அருகில் குடியிருப்பவர்களையோ, கடைக்காரர்களையோ சாட்சிகளாக வைத்துக் கொள்ள முயற்சி செய்யவில்லை என்றால் அன்றையதினம் அவர்களை விசாரிக்கவில்லை. மின்மீட்டரை கழற்ற வேண்டுமென்றால் மெயின் மீட்டரில் இருந்து வருகிற மின்சாரத்தை தடை செய்ய வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும். அவ்வாறு தடை செய்ய வேண்டும் என்றால் மின்சாரவாரியத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்க வேண்டுமா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. இந்த வழக்கில் நான் மின்மீட்டரை கழற்றும் போது மின்சாரம் தடைசெய்யப்பட்டிருந்ததா என்றால் தடை செய்யப்பட்டு இருந்தது. மின்மீட்டருக்கு அருகிலுள்ள பீஸ்கேரியரை கழற்றினால் மின்சாரம் தடைபடும் என்றால் சரிதான். இந்த வழக்கில் பீஸ்கேரியர் எதையும் நான்

கைப்பற்றவில்லை. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சான்றுப்பொருள் 22.05.2001 ம் தேதி நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு, அது குறைபாடுகளால் திருப்பப்பட்டது என்றால் சரிதான்.அதன்பின்பு இந்த மின்மீட்டரை நான் ஒப்படைக்கவிலலை, யாரால் எப்போது நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது என்பது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. நான் பணிமாறுதலில் செல்லும் வரை மின்மீட்டர் காவல்நிலையத்தில் தான் இருந்தது. நான் சொன்ன விதத்தில் பார்வைமகஜரோ, மாதிரி வரைபடமோ தயாரிரக்கப்படவில்லை என்றும், அதனடிப்படையில சான்றுப்பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும், மின்வாரிய அதிகாரிகளின் நிர்பந்தத்தின் பேரிலும், காவல்நிலைய கணக்கெடுப்புக்காக வேண்டியும், என்னுடைய உயரதிகாரிகள் சொல்லியதன் பேரில் நான் எவ்வித விசாரணையும் செய்யாமல், பின்னிட்டு வழக்கிற்கு ஏற்றாற் போல் ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளேன் என்றுசொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன விதத்தில் சார்பு ஆய்வாளர் எந்தவிதமான புகாரும் அ.சா.1 யிடம் இருந்து பெறவில்லை என்றும், அதனடிப்படையில் முதல்தகவல்அறிக்கை எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன விதத்தில் சாட்சிகள்யாரையும் விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd./-xxxxx

முதன்மை மாவட்ட நீதிபதி,

மதுரை.